476
276

# மறுமலர்ச்சி

"திராவிடநாடு" ஆசிரியர்
சி. என். அண்ணாத்துரை, எம். ஏ.

14 FEB 19 6

ம ர்ச்சி நூல் நிலையம்
தெரு :: ஜி. டி., சென்னை

175894

[விலை அணா 2

4 FEB 19·6

## முன்னுரை

திராவிடம் வறுமை மிகுந்த வளமில்லா நாடா? இல்லை; நீர்வளமும் நிலவளமும் குடிவளமும் குறையாத நாடு; வற்றா ஆறுகளையும், அவைகளால் வளர்க்கப்படும் வயல்களையும், அவற்றில் விளையும் வகை வகையான மணிகளையும் கொண்டது திராவிடம்; நாடெங்கும் நஞ்சையும் புஞ்சையுந்தான்; சாலைகளும் சோலைகளுந்தான்; மண்ணுக்கடியில் பொன் உண்டு; கடலுக்குள்ளே முத்துண்டு பவழமுண்டு; காட்டிலே அகிலுண்டு சந்தனமுண்டு நாட்டிலே மக்கள் பெருக்கமுண்டு; ஆனால் என்ன இல்லை?

இந்த நாட்டு மக்கள்-திராவிடர்கள்-உளவலி அற்றவர்களாய், பஞ்சைகளாய், அனாதைகளாய், ஈனத்தொழில் புரிபவர்களாய், இலங்கைக்கும், இந்தோ சீனாவுக்கும், மலேயாவுக்கும், மாரீஸ் தீவுக்கும் செல்லும் தோட்டக்கூலிகளாய்க் கிடக்கும் நிலைமைக்குக் காரணம் என்ன?

பாடுபட்டுப் பசியாற உணவின்றித் திகைக்கும் தேய்நிலை, அரசியலை ஆங்கிலேயரிடமும், ஆத்மார்த்தத்தை ஆரியனிடமும் வாணிபத்தை வட நாட்டானிடமும் ஒப்படைத்துவிட்டு, ஆறறிவு படைத்த மனிதர் ஆறறிவு படைத்த பிற மனிதரிடம் ஆமைபோல் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் பாழ்நிலை, வெளிநாடுகளுக்குக் கூலிகளாகச் செல்லும் இழிநிலை நீங்குவதற்கு வழி என்ன?

ஆம்; திராவிடத்தில் என்ன இல்லை? இழிநிலைக்குக் காரணமென்ன? அதைப்போக்க வழி என்ன என்பவைகளை, புலவரேறு, திராவிடநாட்டுத் தளபதி, அறிவுச் சிகரமாம் தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் மறுமலர்ச்சி என்னும் தலைப்பில் ஆற்றிய சிறு சொற்பொழிவின் மூலம் தெளிவாக விளக்கி வைத்துள்ளார். இச்சொற்பொழிவு படித்தவர்க்கும் பாமரர்க்கும் பஞ்சைகட்கும் பணக்காரர்களுக்கும் ஒருங்கே அறிவு கொளுத்த வல்லதாகும். தமிழறிந்த ஒவ்வொருவர் மனத்திலும் இச்சொற்பொழிவு பதியவேண்டுமென்பதற்காகவே, நூல்வடிவில் இதனை ஆக்கியுள்ளோம். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் கருத்தோடு.

—பதிப்பகத்தார்.

175894



சி. என். அண்ணாத்துரை எம். ஏ.,

# 'மறுமலர்ச்சி'

[சிதம்பரம், இளங்கோ மன்றத்தின் ஆரம்ப ஆண்டுத் துவக்க விழா **1-7-45** மாலை **6**-மணிக்கு, செட்டியார் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில், உயர்திரு C. N. அண்ணாத்துரை, M. A., அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, அவர் ஆற்றிய சொற்பெருக்கு இந்நூல் வடிவில் தரப்படுகிறது:]

"இளங்கோ மன்றம்" என்ற கருத்தமைந்த பெயருடன், நண்பர் மாணிக்கம் அவர்கள் இங்கு நடத்திவரும் இந்தக் கழகத்தின் ஆதரவிலே மூன்றாண்டுகளுக்கு முன்பு நான் பேசியிருக்கிறேன். நாடாளும் உரிமைபெற்ற இளங்கோ துறவியானார். நான் துறவிகளைச் சமுதாயத்தின் தொல்லைகள் என்று கருதுபவன். எனினும், இளங்கோவின் துறவு, காவியுடுத்திக் கானகம் சென்ற கதையாக முடியவில்லை; கவர்ச்சி மிகுந்த காவியத்தை இயற்றிய கனிவாக இருந்தது. 'காவி அணிவது காற்பலம் கஞ்சாவுக்கு' என்ற முறையிலே உள்ள துறவறத்தையே நாங்கள் கண்டிப்பவர்களாகையால், இளங்கோ போன்ற இலக்கியகர்த்தாக்கள் துறவிகளாக இருந்தனர் என்பதற்காக அவர் தம் அருமை பெருமையினை மறக்க மாட்டோம்.

இந்த மன்றத்தினர், அறிவும் ஆராய்ச்சியும் இந்நாட்டிலே பரவப் பணி புரிகின்றனர். அந்தப் பணியின் மூலமாகத்தான் இங்குப் பீடித்துள்ள பிணி பலவும் போக முடியும். வேறெங்கும் தேவைப்படாத அளவு இங்குத்

தான், இத்தகைய பிரசாரம் தேவை. ஏனெனில் இங்குத் தான், தெரிந்துகொள்ளக்கூடியவைகளை மக்கள் தெரிந்து கொள்ளப் பிரயாசைப் படுவதில்லை; புரியாதனவற்றை யெல்லாம் புரிந்தவர் போலப் பேசுவர்; நம்புவர். எனவே தான், இங்கு, பல காலமாகப் பணியாற்றிவரும் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றித் தவறான கருத்தும் விஷமத்தனமான எதிர்ப்பும் இருந்துவருகின்றன.

புறத்தில் புதுமை பெற்றோம், அகத்தில்......

இன்று நாம் சகல துறைகளிலும் புதுமையைப் பெற்றிருக்கிறோம். அனுபவிக்கிறோம். இல்லாமல் வாழ்வு நடவாது என்ற அளவுக்கு வந்துவிட்டோம். இதோ நடக்கும் இந்தக் கூட்டம் இருபத்தைந்து-முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்குமானால், இங்கே இருவர் மூவர் தீவர்த்தியும் கையுமாக நிற்பர். பக்கத்திலே எண்ணெய்ப் பானையுங் கையுமாக வேறு சிலர் நிற்பர். தீப்பொறிக்கும் புகைக்கும் பயந்து பயந்து மக்கள் இருப்பர்; கூட்டம் நடக்கும்! இன்றோ, பொறியும் புகையுமின்றி, பிடிப்போரும் எண்ணெய் ஊற்றுவோருமின்றிப் பன்மடங்கு அதிகமான ஒளியை எளிதாக வீசும் விளக்கு விளங்குகிறது. முன்பு ஒலிப்பெருக்கி இருந்ததில்லை, ரேடியோ இல்லை, இதோ மேலே வட்டமிட்டுக் கூட்டத்தவரின் கவனத்தை இழுக்கும் விமானம் பறந்ததில்லை! இவைகளை இன்று பெற்றுப் பயன் பெறுகிறோம். உடையிலே, உணவிலே, வாழ்க்கை வசதிகளிலே, நாம் மிக மிக முன்னேறி, பழைய நிலைமையிலிருந்து அடையாளம் கண்டு பிடிக்க முடியாதபடி மாறியேவிட்டோம். ஆனால் உள்ளத்திலே மட்டும், அன்று கொண்டதையே விடாப்பிடியாக இன்றும் கொண்டிருக்கிறோம்.

அறிவுப் போர் நடத்துகிறோம்

விமானத்தில் பறக்கும் இந்த விஞ்ஞான காலத்



திலும், இராமன் காலத்திலே நம்பிய சகுனத் தடையை நம்புகிறோம். அரிச்சந்திரன் காலத்துப் 'பல்லி சொல் பலனை' இப்போதும் நம்புகிறோம்; அதன்படியே நடக்கிறோம். சுயமரியாதை இயக்கம் இந்தப் போக்கைக் கண்டிக்கிறது. அந்தக் காலக் கருத்துத்தான் நமக்குச் சொந்தமானது; அதற்குத்தான் வந்தனை வழிபாடு செய்யவேண்டும். அவை சரியா தவறா என்று ஆராய்வதே தேவ நிந்தனை என்று பேசப்படும் போக்கை நாங்கள் கண்டிக்கிறோம். இரவு மதுரமாயிருந்த பால், காலையிலே திரிந்துவிட்டால், சாக்கடைச் சேருகிறது. மாலையிலே மாளிகைகளிலே மனோஹரிகளின் கூந்தலுடன் கொஞ்சிய மலர், காலையிலே கசங்கியதும் வீசி எறியப்படுகிறது குப்பையிலே! பொருள்கள் மட்டுமல்ல, எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், நீதிகள் எனும் எவையும் அப்படித்தான் காலத்துக்கு ஏற்றதாக, கலைக்கு உதவுவதாகப், பயன்தரத் தக்கதாக, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும் என்று கூறுகிறோம். இந்த அறிவுப் போர் நடத்தும் எங்களைக் குறைகூறும் தோழர்கள் உள்ளம் ஒன்று தவிர, மற்றவற்றிலே மாறிவிட்டார்கள். அதை மறைக்கவுமில்லை. இங்குத் தவிர, மற்ற இடங்களிலே கருத்துக்கள் அவ்வப்போது ஆராயப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு, புது மெருகிடப்பட்டு, சில நீக்கப்பட்டு, பல புதிதாக ஆக்கப்பட்டுள்ளன. செடியிலே மலர் கூத்தாடுகிறது, மணம் வீசுகிறது; மறு நாள் வாடுகிறது, உதிர்கிறது. பிறகு வேறொரு மலர் உதிக்கிறது. இரண்டாவது மலர் பூத்திட, அந்தச் செடிக்கு நீர் பாய்ச்சி, எருவிட்டுப் பாதுகாத்திட வேண்டும். அப்போதுதான் புது மலர் கிடைக்கும்.

மறுமலர்ச்சி—அன்றும் இன்றும்

அது மட்டுமல்ல நமது பணி! வாடிட மலரையே

மீண்டும் மலரச் செயய முயல்கிறோம். அழுக்கடைந்த அமைப்புகளைச் சீர்செய்வது, திரிந்துபோன முறைகளைத் திருத்தி அமைப்பது, பாசி படிந்த இடத்தைத் தூய்மையாக்குவது, தேய்ந்த தத்துவங்களுக்கு உரம் ஊட்டுவது, குனிந்த உள்ளத்தை நிமிர்த்துவது, கூனிப்போன கொள்கையைச் சரிசெய்வது, இழந்த இன்பத்தைத் தேடுவது! இது எங்கும் நடக்கும் நிகழ்ச்சி. இதை மறுமலர்ச்சி என்று அழைப்பர் ஐரோப்பாக் கண்டத்திலே. பல்வேறு நாடுகளிலும் இந்த மறுமலர்ச்சி நடந்ததுண்டு. ஒரு காலத்தில் ஜெர்மனியும், பிரான்சும், இத்தாலியும், இங்கிலாந்தும், வேறுபல நாடுகளும் "பாவ மன்னிப்புச் சீட்டுகளை"ப் பாதிரிமார்களிடம் பணம் கொடுத்துப் பெற்றுப் பரமனைத் திருப்திப் படுத்தியதாக எண்ணினதுண்டு. ஏசுவின் விசுவாசிகள் அனைவரும் கத்தோலிக்கராகமட்டுமே இருந்தனர். மார்ட்டின்லூதர் என்ற மாவீரன் தோன்றினான். மார்க்கத் துறையிலே மறுமலர்ச்சியை உண்டாக்கினான்; 'பிராட்டஸ்டெண்ட்' கிளர்ச்சி நடந்தது. இதன் பயனாக ஏசுவின் விசுவாசிகள் தொகையும் குறையவில்லை, கிறிஸ்து மார்க்கத்தின் எழிலும் குன்றவில்லை! எதிர்ப்பும் ஆபத்தும் அடக்குமுறையும் இருந்தன; மறைந்தன. லூதரின் புரட்சி அறிவுப் பூங்காவிலே அழகான மறுமலர்ச்சியை உண்டாக்கிற்று மார்க்கத் துறையோடு நின்றுவிடவில்லை மறுமலர்ச்சி. ஆட்சிமுறை, சமுதாய அமைப்புமுறை, பொருளாதாரக் கருத்து, கலை முதலிய எல்லாத் துறைகளிலும் புகுந்தது. அதற்கு எங்கும் எதிர்ப்புத்தான்! ஆனால் மறுமலர்ச்சி மாய்ந்து போகவில்லை.

சுயமரியாதை இயக்கம். இங்கு மறுமலர்ச்சிக்குப் பாடுபடுகிறது. கடவுள், மதம், சமூகம், பொருள் இயல், கலை, ஆட்சிமுறைஆகிய சகலவற்றிலும் இந்த இயக்கம் வேலைசெய்கிறது; எங்கும் பழமையின் இருள் அகல



வேண்டும், புதிய ஒளி பரவ வேண்டும் என்று பாடுபடுகிறது.

அறிவாளிகள் எனப்படுவோர் எதிர்ப்பதேன்?

சுயமரியாதைக்காரன் என்ன செய்கிறான்? வகுப்புவாதம் பேசுகிறான், பார்ப்பனரைத் திட்டுகிறான், போதாக்குறைக்கு இப்போது ஆரியர் - திராவிடர் என்றும் பேசுகிறான்! என்று ஏசுபவர் பலர். சுயமரியாதை இயக்கம், மறு மலர்ச்சி இயக்கமென்று மன்றாடிக் கூறிய காலத்திலே, இந்நாட்டு மேதாவிகள் ஆமென்று கூறவோ, சரியா என்று பரிசீலனை செய்யவோ மனமின்றிக் கிடந்தனர். வெளிநாடுகளில் எல்லாம், இத்தகைய சீர்திருத்த இயக்கத்தை அறிவாளிகள் ஆதரிப்பார்கள், பாமரர் எதிர்ப்பர். இந்த விசித்திரமான நாட்டிலேயோ அறிவாளிகள் என்று கூறப்பட்டுவரும் படித்தவர்களான பார்ப்பனர், முழுமூச்சாகச் சீர்திருத்த இயக்கத்தை எதிர்த்தனர்; படிக்காதவர்கள் என்று அவர்களால் இகழப்பட்ட தோழர்கள் ஆதரித்தனர்; கலந்து வேலை செய்தனர். விரும்பி, மனமார இசைந்து பார்ப்பன மேதாவிகள் கலந்திருந்தால், இன்று நாங்கள் ஆரியர்-திராவிடர் என்ற வரலாற்று வாயிற்படி வரையிலே போயிருந்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. எங்களுடைய நியாயமான கிளர்ச்சியை, நாட்டுக்கு நன்மை தரக்கூடிய இயக்கத்தை, அறிவாளிகள் ஆதரிக்கவேண்டிய மறுமலர்ச்சியை, வெளிநாடுகளிலே விவேகிகள் வரவேற்கும் இயக்கம் போன்ற சுயமரியாதை இயக்கத்தை, ஏன் இந்த நாட்டிலே உள்ள மேதாவிகள், மகாகனங்கள், அல்லாடிகள், சாஸ்திரிகள், ஆச்சாரியார்கள் விஷம் போலப் பாவிக்கின்றனர் என்ற சிந்தனை எங்களுக்கு ஏற்பட்டது. மற்ற நாடுகளைப் போலன்றி இங்கே இந்த மேதாவிகள்—பிராமண ஜாதியினர்—பெரும்பான்மையான மக்கள் இருளில் கிடந்தால்

மட்டுமே வரமுக்கூடிய விதமாகத் தமது வாழ்வை அமைத்துக்கொண்டிருக்கின்றனர்; புது எண்ணம் பிறந்தால், தமது வாழ்வுக்குக் கேடு வரும் என்று இவர்கள் பயப்படுகிறார்கள். அதனாலே தான் மறுமலர்ச்சியை இவர்கள் எதிர்க்கிறார்கள் என்பது தெரிந்தது. தெரியவே இந்தக் குணத்தை மாற்றிக் கொள்ளுங்கள் என்று பார்ப்பன குலத்துக்குக் கூறத்தொடங்கினோம்.

மக்கள் மனத்தல உண்மை ஊடுருவிப் பாய்ந்துவிட்டது

மாறக்காணோம். இவ்வளவு கூறியும் இந்தக் குலத்தின் குணம் மாறக் காணோமே ஏன்? இந்த குணம் எப்போது இந்தக் குலத்துக்கு உண்டாயிற்று என்று ஆராய்ந்தோம். பழங்கால முதலே இந்தக்குணம் பார்ப்பனருக்கு இருந்து வந்திருக்கிறது என்பது தெரிந்தது. தெரியவே, இப்படிப்பட்ட கேடு பயக்கும் குணத்தை இந்தக் குலம் பெற்றிருக்கிறதே, இந்தக் குலம் நமது இனமா? என்று ஆராய்ச்சி செய்தோம். செய்ததில் இவர்கள் பழந் தமிழ் மக்களல்ல, வடநாட்டுப் பகுதியிலிருந்து இங்கு வந்தவர் என்று ஏற்பட்டது. ஏற்படவே, வடநாடு சென்று இந்த வர்க்கத்தின் வரலாற்றை விசாரித்தோம். அதுபோது வரலாறு நம்மைக் கைபர் கணவாய் அருகே அழைத்துச் சென்று, மத்திய ஆசியாவிலிருந்து இந்த ஆரிய இனம் இந்தக் கைபர் கணவாய் வழியாகத்தான் இங்கே நுழைந்தது என்று காட்டிற்று. வரலாறு கூறிய உண்மையைத்தான் இன்று நாங்கள் ஆரியர்-திராவிடர் பிரச்னை என்று பேசுகிறோம். வரலாறு காட்டிய உண்மை, வாழ்க்கை முறையிலேயும் தெரிகிறது. எனவே மறுமலர்ச்சி இயக்கத்தார், இன எழுச்சிக்காக இன்று வேலைசெய்கின்றனர். இந்த மறுமலர்ச்சியை மார்க்கத் துறையிலே புகுத்தும் போது, நம்மை நாஸ்திகர்களென்று நிந்திக்கின்றனர்; சமுதாயத் துறையிலே புகுத்



தும் போது வகுப்புவாதிகள் என்று வசை பேசுகின்றனர், அரசியல் துறையிலே புகுத்தும் போது நாட்டைத் துண்டாடுபவர்கள் என்று தூற்றுகிறார்கள். இந்தத் தூற்றலால் நாம் கூறும் உண்மையை மறைத்துவிட முடியாது. உண்மை, சமூக மக்களின் மனத்திலே ஊடுருவிப் பாய்ந்துவிட்டது.

தள்வன தளளிக் கொள்வன கொள்க.

மறுமலர்ச்சி நோக்கத்துடன் நாங்கள் எதனையும் ஆராய்கிறோம். சிலர் அந்த நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாமல், எந்தெந்தச் சமயத்திலே நாங்கள் எதை எதைக் குறை கூறுகிறோமோ, அந்தந்தச் சமயத்திலே நாங்கள் அவ்வக் கருத்துக்கு விரோதிகள் என்று கூறிவிடுகிறார்கள். உதாரணமாக, நாங்கள் இராமாயணத்தை மறுமலர்ச்சி நோக்குடன் ஆராய்ந்து அது நமக்கு ஏற்ற ஏடல்ல என்று கூறுகிறோம். உடனே சிலர், 'இவர்கள் கலையின் விரோதிகள்' என்று அவசர முடிவு கட்டுகிறார்கள்; இது தவறு. கண்ணோடு கண்ணினை நோக்கொக்கிட, ஒன்றை ஒன்று பற்றி உண்ணத் தலைப்படும் அளவு காதல் கொண்டு வில்லை ஒடித்து, எந்தச் சீதையை இராமன் திருமணம் புரிந்து கொண்டானோ, எந்தச் சீதையின் பிரிவு ஆற்றாமல் மானே! மயிலே! மரமே! மடுவே! ஜானகியைக் கண்டீரோ என்று கானகத்திலே நின்று கதறினானோ, அதே பிரியநாயகி சீதையை, நிந்தனை நேர்ந்தால் என்ன செய்வது என்று சஞ்சலப்பட்டு, ஆருயிர்க் காதலனாகிய இராமன், அவள் கற்புள்ளவள் தான் என்று கண்டு கொள்ளவும், காட்டவும் வேண்டி, சீதையை நெருப்பிலே குளித்து எழுந்திரு என்று கூறி, சீதையின் கற்பை ஆராய்ச்சிசெய்தான் என்றால், இராமாயணத்தை, நெடுங்காலத்திற்கு முன்னே இருந்த நினைப்புக்கும் நிலைமைக்கும் நீதிக்கும் ஏற்றதான கதையை, இன்று ஆராய்ச்சி செய்து பார்ப்பதிலே தவறு என்ன? இராம

னுக்கும் சீதைக்கும் இருந்த தொடர்பை விடவா, உங்களுக்கும் இராமாயணத்துக்கும்! இராமனே சீதை சம்பந்தமாக ஆராய்ச்சி செய்தார் என்றால் நீங்கள் 'இராமாயணம் நமக்கேற்ற நீதி நூலா, நமது நாட்டு முறையைக் கூறும் நூலா, நமது மதபோதனைக்குரிய ஏடா என்று ஆராய்ச்சி செய்து பார்ப்பதிலே தவறு என்ன இருக்கிறது! நாங்கள் இந்தக் காரியத்தைத்தான் செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். இராமாயணத்துக்கு மட்டுமல்ல, எதற்கும்! ஏடுகள் விஷயமாக மட்டுமல்ல, ஏற்பாடுகள் விஷயமாகவுங்கூட. தேவையா, அறிவுடைமைதானா, நமக்கு நன்மை பயப்பதா, நமக்கு உயர்வு தருவதா, நாம் வாழ வழிவகுப்பதா என்று எதனையும் ஆராய்ந்து பார்த்து, தள்வன தள்ளிக் கொள்வன கொள்க என்று கூறுகிறோம். இது குற்றமாகுமா என்று உங்களைக் கேட்கிறேன்.

சீதையின் கற்பைப்பற்றி யாருக்கு அக்கறை

சீதை கற்பிழந்தவள் என்று நண்பர் புலவர் மாணிக்கம் அவர்கள் கூறினதாகவும், அதற்காக இவ்வூர் ஐயரொருவர் கோபித்ததாகவும் இங்குக் கூறினார். உண்மையிலேயே, சீதை கற்புடைய மங்கையா இல்லையா என்பது பற்றிய அக்கறை இராமனுக்கு இருக்கவேண்டும். நமக்கு இருக்கவேண்டிய அவசியமில்லை. இராமன் இது விஷயத்திலே அக்கறை கொண்டவனானதால் தான், இந்தச் சந்தேகம் வரும் என்று சஞ்சலப்பட்டுச் சீதையின் பரிசுத்தத் தன்மையை விளங்கச் செய்ய, சீதையை நெருப்பிலே மூழ்கிடச் செய்தான். அவன் அதனால் திருப்திப்பட்டால், அவன் சஞ்சலம் தீர்ந்தது என்று அர்த்தம். நமக்கு அந்தப் பிரச்னை, தொல்லையோ துயரமோ தரக்கூடியதல்ல. ஆனால் ஒருவிஷயம். கற்பு விஷயமாக இராமன் மனோபாவம் எப்படி இருந்தது என்பதைக் கம்ப இராமாயணத்திலே ஓரிடத்திலே காணச் சந்தர்ப்பம் இருக்கிறது.



4 FEB 19.6

அற்புத உதாரணம் இதோ!

விசுவாமித்திரருடன் கானகம் [illegible] இராமன், மிதிலை போகிறான். வழியிலே அவனுடைய பாதத்தூளி பட்டுக் கல்லொன்று வெடித்து ஒரு காரிகை வெளிப்படுகிறாள். 'ஐயன்' கேட்க முனிவர் கூறுகிறார்: "இராமா! இவள் கௌதமரின் தர்ம பத்தினி அகலிகை" என்று. தர்ம பத்னிக்கு ஏன் இக்கதி நேரிட்டது என்பதையும் ரிஷி விளக்குகிறார்: அகலிகைமீது காமங்கொண்ட இந்திரன்—தேவர்க்கு அரசன்; தேவராஜனுக்குத் தோன்றும் திவ்ய குணத்தைப் பாருங்கள்—கோழி உருக்கொண்டு கூவ, விடிந்தது என்று எண்ணிக் கௌதமர் வெளியே போக, இந்திரன் கௌதமருடைய உருக்கொண்டு, உள்ளே நுழைந்து, அகலிகையைக் கூடினான்! எந்த நேரத்தில்? விடியற்காலையிலே! ஆஸ்ரமத்திலே, இது நடந்தது. ஆரம்பத்திலேயே கதையிலே உள்ள ஆபாசத்தைப் பாருங்கள். கௌதமர் பெரிய தவசி! ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள தொடர்பு பற்றிய விசாரணையிலே ஈடுபடவேண்டிய முனிசிரேஷ்டர் கௌதமர். அகலிகை மாண்புடைய மாது! விடியும் நேரம்! கதிரவன் ஒளி பரப்பும் நேரம்! நீராடல், நிகண்டுபடித்தல், நிர்மலனைத் தொழுதல் ஆகிய காரியங்களுக்கேற்ற நேரம். ஆனால் கதையின்படி அந்த ஆஸ்ரமத்திலே அதிகாலைக் கடன் கலவி! இது ஆஸ்ரமவிதியோ, அல்லது கலியின் முறையோ தெரியவில்லை. அம்மையாரும் இதிற் சிந்தனை ஏதும் கொண்டார் என்று குறிப்பில்லை. ஆபாசம் இத்துடன் முடியவில்லை; நாடிப் பொருள் கிட்டிற்று என்று மட்டற்ற மகிழ்ச்சியுற்றுக் கூடிக் கிடந்தான் தோடுடைய செவியனையும், கருட வாகனனையும் நித்த நித்தம் தொழுது வாழும் தேவதேவன்! காலை மலரும் நேரத்திலே காமம் மிகுந்தது. காவிக்கும் கமண்டலத்துக்கும் கடுகளவும் அடுக்காதே என்று கருத்திலே கொள்ளாது

மட்டுமல்ல; ஒரு சமயம், பதி சொல் தவறலாகாது என்பதற்காகப் பசி உணர்ந்த அம்மையார் விருந்திட்டார்கள் என்று கூறிச் சமாதானம் பெறலாம். ஆனால் அகலிகை அம்மையின் மனம், அந்த அளவோடு நின்றதாகக் கவி கூறவில்லை. கலவி இன்பத்தின்போதே கண்டு கொண்டார்களாம் கௌதமரல்ல அந்த ஆசாமி என்று!

**ஆச்ரமத்து அம்மையின் அருமையான பழக்க உணர்ச்சி**

இதோ நான் பேசுகிறேன்; ஒலிபெருக்கி சத்தத்தை வெளியே எடுத்துச் செல்கிறது. வீதியிலே சற்றுத் தொலைவிலே வருகிறபோதே, 'அண்ணாத்துரையின் குரல்' என்று கூறுகிறார்கள் என்றால், என்ன பொருள்? என் குரலைப் பலமுறை கேட்டுப் பழக்கப்பட்டதால், இம்முறை கேட்கும் போது, என் குரல் என்னும் உணர்வு தோன்றுகிறது பழக்கக் காரணத்தால். ரேடியோவிலே இசை கேட்கிறோம். எடுப்பின் போதே கூறிவிடுகிறோம் இன்ன வித்வான் பாடுகிறார் என்று அவர் இசையைக் கேட்ட பழக்கத்தால். இவ்விதமாக அம்மையார் அகலிகையார், கலவி செய்வது கௌதமனல்ல என்று கண்டுகொண்டார்கள் என்று கம்பர் கூறுகிறார் என்றால், ஆஸ்ரமத்து அம்மைக்குள்ள அருமையான பழக்க உணர்ச்சி எவ்வளவு அற்புதமாக அமைந்திருக்கிறது பாருங்கள்!

**இடத்துக்கேற்ற இயல்பு**

போகட்டும்; இடத்துக்கேற்ற இயல்பு இல்லை, மறப்போம் அந்தக் கேட்டினையும். மேலே நடந்தது என்ன? கௌதமர் அல்ல என்று தெரிந்ததும் அம்மையார் என்ன செய்தார்கள்? ஆ! பாவி! என்று அலறினார்களா? இல்லை! ஆவேசம் பிடித்தவர் போல எழுந்தோடினார்களா? இல்லை! "என்ன அக்கிரமம் நடந்துவிட்டது; ஐயோ என் நாதரல்லவே இந்த நீசன்! பாதகா நீ! பிடி சாபம்" என்று மிரட்டினார்களா? இல்



லை. வேறு நடந்தது என்ன! வேறு ஆள் என்று மனத்திலே பட்டது, அதனால் காரியம் எதுவும் கெட்டுவிட்டதாகக் கவி கூறவில்லை. தட்டுத் தடுமாறித் தவசிரேஷ்டருக்கு மனைவியாக வாய்த்த அந்தத் தளிர்மேனியாளை, தேவர் உலகத்துக் காமுகன் அனுபவித்தான்; பிறகு கௌதமன் பிரவேசம், சாபம் என்று கதை. இங்கே கவனிக்கவேண்டியது, கௌதமன் அல்ல என்று தெரிந்ததும் தடுக்காமல் இருந்த அகலிகைத் புன்ன காரிகை என, அறிவுள்ள எவரேனும் ஒப்புக்கொள்வரா? தெரிந்தது, ஆனால் என் செய்வேன் என்று குப்பைமேட்டிலே வாழும் குடியனின் சுத்தி கூறினாலும், அவன் சும்மா விடுவானா? அவன் சும்மா இருப்பினும், ஊரார் வாளாயிருப்பரா? அத்தகைய அகலிகையை, இராமர் அடிதொழுகிறார் முனிவர் அம்மையின் கதையைக் கூறிய பிறகு! இவ்விதம் கதை இருக்கிறதே. இப்போது கூறுங்கள் கற்பு சம்பந்தமாகக் *காகுத்தன் கொண்ட கருத்துத்தான் என்ன?

**கம்பதாசர்கள் சமாதானம் கூறமுடியுமா?**

கம்பதாசர்கள் இதற்கு என்ன சமாதானம் கூறுவர்? கேட்டாரா இராமபிரான், "அம்மே! அந்த வேளையிலே காமத்தால் அந்தகனான இந்திரன் சூதாக நடந்தான், இடையிலே கௌதமரல்ல என்று நெஞ்சு தெரிவித்தும், மிஞ்சிய காமத்தால் உம்மிடம் கொஞ்சி விளையாடிய அந்தப் பஞ்சையை நீர் மிரட்டியிருக்க வேண்டாமா? அவ்விதம் செய்யாதது தவறல்லவா?" என்று. இல்லை; அம்மையின் அடி தொழுதார்! பிடி சாபம் என்று கூறிய கணவன் காரிகையைக் கல்லாக்கினார். சகஜம். ரிஷிக்கு இருந்த ரோஷம் இது. கற்பை இழக்கின்றீ

* காகுத்தன் — இராமன்

நேரத்திலே, மனத்திலே அந்தச் சந்தேகம் தோன்றி
யும், வேல் பாய்ந்த வேங்கைபோல் சீறாமல், அது சாத்
தியமில்லை எனினும் வல்லூறு துரத்தக் கண்டு வட்ட
மிடும் மாடப் புறாப் போல வட்டமிடாமல், அவரல்ல
போலிருக்கிறதே என்று தோன்றியும் அந்தத் தோகை
யாள், கேடு முற்றுமளவும் கிடந்தது குற்றந்தான்;
அதற்காகக் கழுவாய் தேடத்தான் வேண்டும் என்று
கோசலைச் செல்வன் கூறலாகாதா? விழுந்து கும்பிடு
கிறான். வழுக்கி விழுந்த வனிதை முன்! பிறகு கற்புக்
குப் பொருள்தான் என்ன? கானகம் வாழும் காட்டு
ஜாதி மங்கையா? இல்லையே! கடவுள் நெறி நிற்கும்
முனிவரின் தர்ம பத்தினி ஆயிற்றே அகலிகை!

### சீதை கற்பும் இராமன் ஆராய்சசியும

அதற்மேலே அகலிகை குற்றமற்றவன், அவள் நெஞ்
சிலே தவறில்லை என்று விசுவாமித்திரர் கௌதமருக்குச்
சிபார்சு செய்கிறார். அகலிகை குற்றமற்றவள், நெஞ்சார
ஏதும் பிழை செய்யவில்லை என்று கௌதமர் கருதி
இருந்தால் கல்லாக்கி இருக்கமாட்டாரே! கல்லாக்கிய
தன் கருத்தே, அவர் அம்மையை அசுத்தமானாள் என்று
கருதியதைக் காட்டுகிறது? அவருக்கு விசுவாமித்திரர்
சிபார்சு செய்கிறார் அகலிகை குற்றமற்றவள் ஏற்றுக்
கொள்க என்று. "என்னமோ தம்பீ! எதுவோ தெரி
யாமல் நடந்துவிட்டது. அவள் வேண்டுமென்று தெரிந்து
செய்யவில்லை. அவள்மீது குற்றமில்லை. என்ன செய்வது?
நடந்தது நடந்துவிட்டது, நல்லபெண், வீட்டுக்கு
அழைத்துக்கொண்டுபோ, விசாரப்படாதே" என்று
எந்தக் கணவனுக்காவது யாராவது சிபார்சு செய்து
விட்டு, உருவாக வீடு திரும்ப முடியுமா! இத்தகைய
"சிபார்சுகளை" ஏற்றுக்கொண்டார் கௌதமர். இந்த
அகலிகை கதை மூலம், இராமன், கற்பை ஒரு மங்கை



இழந்துவிட்டபோதிலும். நெஞ்சாரக் குறை செய்ய
வில்லை என்றால், அவள் மன்னிக்கப்பட வேண்டியவள்.
மீட்கப்படவேண்டியவள் என்பது மட்டுமல்ல; அவள்
அடி தொழுதிடுதலும் சரி என்ற அளவுக்கு மனோபாவம்
கொண்டவன் என்பது விளங்குகிறது. சீதை கற்பிழந்த
வளா இல்லையா என்பது பற்றி இராமன் ஆராய்ச்சி செய்
தது எம்முறையிலே இருந்திருக்கும்? இப்போது நீங்கள்
தான் சிந்தித்துப் பாருங்கள்! என்ன சொல்வீர்கள்?
சீதையின் உடல் மட்டுமே கெட்டுவிட்டதா?

என் நண்பர் மாணிக்கம் கூறினார் தவறு செய்வ
தென்பது, மனம், வாக்கு, காயம் (எண்ணுவது, சொல்
வது, செய்வது) என்ற முறையிலேதான் இருக்கும் என்று.
இதிலே, சீதையைப் பற்றிக் கம்பர் கூறும்போது ஒரு கவி
யிலே சீதை மனத்தாலும் வாக்காலும் குற்றம் செய்தி
லள் என்று கூறுகிறார். காயத்தை விட்டுவிடுகிறார். ஏன்?
காயம் கெட்டுவிட்டது என்ற பொருள் தொக்கி நிற்க
வில்லையா? இவ்வளவு முக்கியமான பிரச்னையிலே அவர்
தவறுதலாகவோ, மறந்தோ, காயத்தைப்பற்றிக் கூறாமல்
விட்டிருப்பாரா என்று கேட்டால் கோபித்துப் பயன்
என்ன? பதில் கூறித்தானே ஆகவேண்டும்! கவி தவ
றிழைத்தார் என்று கூறுங்கள் ஜானகியைக் காப்பாற்ற
வேண்டுமானால்! கம்பனையா குறை சொல்வது என்று
தோன்றினால், ஜானகியைக் கைவிடுங்கள்! இரண்டும்
இஷ்டமில்லை என்றால் சிதம்பரநாதரிடம் சொல்லிப்
பாடலை ரிப்பேர் ஷாப்புக்கு அனுப்பி வையுங்கள்! உள்
ளதை நாங்கள் சொல்லும்போது எங்கள்மீது கோபித்து
என்ன பயன்? புதிய உலகில் வாழும் மக்கள், எதனையும்
புது நோக்குடன் கவனித்தல் வேண்டும் என்று நாங்கள்
கூறுகிறோம். இது தவறு என்று சாற்றுகிறார்கள் சில
தோழர்கள். அவர்களுக்கு ஒரு புத்தகத்தைப்படிக்கும்படி
சிபார்சு செய்கிறேன். அது சு. ம. வின் ஏடல்ல.

கௌதமர் விசாரணை—அகலிகையின் வாக்குமூலம

அது வ. இராமசாமிஐயங்கார் என்பவர் தீட்டிய புத்தகம். வீரவனிதையர் வாழும் ஒரு வசீகர தீவைக் கற்பனைச் சித்திரமாகத் தீட்டிக் காட்டுகிறார் நண்பர் வ. ரா. அந்தத் தீவிலே கல்லூரி! கல்லூரியிலே நாடகம். ஒரு நாடகம் அகலிகை பற்றி. என்ன நடக்கிறது? நீதிதேவி, கௌதமனை அழைத்து விசாரணை நடத்துகிறாள்! அகலிகையை அல்ல! குற்றம் செய்தது அகலிகைதானே! கொடுமைக்கு ஆளான கௌதமனை ஏன் விசாரிக்கவேண்டும் என்று கேட்பீர்கள். விளக்கம் இருக்கிறது அதில். "ஏன், அகலிகையைக் கல்லாக்கினாய்!" என்று கேள்வி—குற்றச்சாட்டு அது. "அவள் கற்பிழந்தாள். எனவே தண்டித்தேன்" என்றார் கௌதமர். இந்திரன் விசாரிக்கப்படுகிறான். 'இல்லை என்று நான் கூறவில்லை. நடந்தது உண்மை. ஆனால் நான் என்ன செய்வேன். அந்த நாரீமணி மீது எனக்கு நெடுநாட்களாக நாட்டம். எப்படியோ கௌதமருக்கு அவள் கிட்டிவிட்டாள். என் மனத்திலே இருந்த மோகம் அதனால் பட்டுப்போகவில்லை. சமயம் கிடைத்தது, சல்லாபம் நடந்தது" என்று அவன் கூறிவிட்டான். அகலிகையை விசாரித்தபோது "கௌதமன் ரிஷி! தவசிக்குத் தையலாள் ஏன்? வேண்டுமெனில் அவர் போன்ற பரலோகப் பிராப்திக்காகப் பஜனை செய்யும் ஒரு பழுத்த பக்தையை மணம் செய்து கொள்வதுதானே! நான் இள மங்கை. என்னை மணந்தார். இன்பபுரிக்கு அவர் என்னை அழைத்துச் சென்றாரா, இல்லை. இறைவன் தொண்டின் பெருமையையே அவர் அறிவார், உரைப்பார். இந்திரன் என்னை இழுத்துச் சென்றான் இன்ப புரிக்கு. குற்றம் என்மீது இல்லை. எனக்குக் கணவனாக வந்து, வாழ்வுக்குத் தடைக்கல்லான கௌதமனே குற்றம் புரிந்தவன்" என்றாள் மாது அகலிகை. "தீர்ப்பு என்ன?"



175894

கௌதமன் செய்த... தவறு... இஷ்டம்போல் நடக்கலாம் ... இது கோதைத் தீவிலே நடக்கும் நாடகம். எவ்வளவு புரட்சிகரமானது, புதுமையானது, மேதை நிறைந்தது நுணுக்கமான ஆராய்ச்சி என்று நண்பர் வ. ரா. வின் இந்த முறையைப் பலர் புகழக் கேட்டிருக்கிறேன், மகிழ்ந்துமிருக்கிறேன். ஆனால் அடுத்த கணம், மகிழ்ச்சி மறைந்து பெருமூச்செறிந்திருக்கிறேன் இதனைப் புகழ்பவர்களே, இதுபோல் பழைய நிகழ்ச்சிகள், பழைய நிலைமைகள், பழைய நீதிகள் இவைகளை எடுத்துக்கூறும் ஏடுகள் ஆகியவற்றைக் கண்டித்துப் புது நோக்கம், புதுப்பொருள் கூறும் சுயமரியாதைக்காரர்களைக் கயவர், கலை உணர்விலாதார், கடவுளை மறந்தார், கசடர் என்று கண்டிக்கின்றனரே, நல்லவேளை நண்பர் வ. ரா. நம்மோடு பிறக்காமல், அங்கே பிறந்தார், அதனால் தப்பினார். அவர் கூறுவதுபோல மட்டுமல்ல அவ்விதமான சிந்தனைக்கே வழி கோலிய சுயமரியாதைக்காரர்மீது எவ்வளவு சுடு சொல் வீசப்படுகிறது என்று எண்ணும்போது ஏக்கம் ஏறத்தான் செய்கிறது.

சீதை சற்றறவள்—இதோ ஆதாரம்!

சீதை தீக்குளிக்கு முன்பு செப்பினாள் என்று, கம்பஇராமாயணம் மீட்சிப் படலத்திலே (84ம் பாட்டு) உள்ள செய்யுளை ஆராய்ச்சி செய்துதான் நண்பர் மாணிக்கம் சீதையின் நிலைபற்றிகூறினார். அதற்கு அவரை நிந்தித்தனர். அவரை அவ்விதம் சிந்திக்கச்செய்த செய்யுளைப் பாருங்கள். பார்த்தபின் அவர் கருத்திலே குறை காணுவது சரியா தவறா என் நீங்களே முடிவு செய்யலாம்.

"கனத்தினால் கடந்த பூண்முலைய கைவனை
மனத்தினால் வாக்கினால் மறுவுற்றே னெனின்
சினத்தினால் சுடுதீயால் தீ! செல்வா என்றாள்
வனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினாள்"

என்பது அப்பாட்டு. முதல் அடி சீதையைப் பற்றிய வர்ணனை. கடைசி அடி, அம்மை ஐயனை வணங்கின செய்தி. இடையே உள்ள இரண்டு அடிகளே பிரஸ்தாப விஷயத்துக்கு உரியவை. அதன் பொருளை கவனியுங்கள்!

> தீச்செல்வா! மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேனெனின்
> சினத்தினால் சுடுதி என்றாள்.

என்று அங்வயப்படுத்திப் பாருங்கள். அக்னிதேவா! நான் மனத்தாலோ மொழியாலோ, அதாவது சிந்தனையாலோ பேச்சாலோ குற்றவாளியாக இருப்பின், கோபங்கொண்டு என்னைச்சுட்டு எரி என்று சீதை கூறுகிறாள். மனம், வாக்கு இரண்டு பற்றி மட்டும் கூறிக் காயம் பற்றிக் கூறாதது ஏன்? திரிகரணம் சுத்தியாக இருத்தல் வேண்டும், அதாவது மனம், வாக்கு, காயம் எனும் மூன்று கரணமும் சுத்தமாக இருக்கவேண்டும் என்றுதானே அற நூல் கூறுகிறது. இங்கு அம்மை திரிகரணத்தில் இரண்டு கூறி மூன்றாவதை விட்டது ஏன் என்பதுதானே பிரச்னை! இதைக் காட்டும் தோழர்மீது கோபித்துப் பயன் என்ன? இதனை மாணிக்க ஐயர் சொன்னால் மேதாவி, ஆராய்ச்சியாளர் என்று பேசும் கூட்டம். மாணிக்கம் செட்டியார் என்பதற்காகத்தானே எதிர்க்கிறது! இது தகுமா? என்று கேட்கிறோம்.

## இளைஞர்களே! நீங்கள் தீர்ப்பளியுங்கள்!

நண்பர் மாணிக்கம் கம்பராமாயணச் செய்யுள் ஒன்றை ஆராய்ந்து சீதையினுடைய கற்பின் இலக்கணத்தைப்பற்றிப் பேசினார். இது கலைவாணர்களுக்குக் கிலியும், மதவாதிகளுக்கு மருளும், பழமை விரும்பிகளுக்குப் பீதியும் கொடுத்திருக்கிறது. மேல் நாடுகளிலே இத்தகைய ஆராய்ச்சிகள் அறிவாளிகளால் வரவேற்கப்பட்டு மறுமலர்ச்சிக்குப் பயன் படுத்தப்படுகின்றன. பொதுவாகவே கலையைப்பற்றி நாங்கள் கொண்டுள்ள கருத்து தவறான



நோக்கத்துக்காக அல்ல. எங்களையும் கலையையும் நன்றாக உணராதவர்களும், உள்ளது போய்விட்டால் உரம் கெட்டுவிடும் என்று எண்ணும் உளவலி அற்றவர்களும், நம்மைக் கயவரென்றும் கலை அறிவு இல்லாதார் என்றும் கடிந்து உரைத்தாலும், இளைஞர்களாகிய நீங்கள் நான் கூறுவதைப் பொறுமையுடன் கேட்டுத் திறமையுடன் ஆராய்ந்து தீர்ப்பளிக்க வேண்டுகிறேன். கலை விஷயமாக மட்டுமல்ல. கடவுட் கொள்கை விஷயமாகவுங்கூட.

## காலத்துக்கேற்ற கலைக்குதவும் ஆராய்ச்சியே எங்களது

மதத்தலைவர்கள் என்று அபிஷேகிக்கப்பட்டு மடாலயங்களிலேகொலுவீற்றிருக்கும் குருமார்கள் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் அம்மைக்கும் ஐயனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற முறையிலே அல்ல நாங்கள் செய்யும் ஆராய்ச்சி. ஜன சமுதாயத்திற்குத் தேவையான — காலத்துக்கேற்ற, கலைக்கு உதவக்கூடிய முறையிலே கருத்துக்கள் அமைந்திருக்கின்றனவா என்பதே எங்களுடைய கவலை. இதற்காக எங்கள்மீது காய்வது மறுமலர்ச்சி இயக்கத்தைக் கெடுப்பதாகும். மறுமலர்ச்சி இயக்கத்தைக் கெடுப்பவர்களை மாநிலத்திலே மிகமிக மட்டரகமென்று மதியுள்ளோர் கூறுவர்.

## கயவனும் காமுகனும் கடவுளா?

அன்புக்கும் அருளுக்கும் இருப்பிடமென்று தத்துவம் கூறும் ஆண்டவனைப் பற்றி அந்த நாளிலே ஆதிக்கத்திலிருந்தவர்கள் எழுதிவைத்த ஆபாசமான கதைகளை இந்தக் காலத்திலே வந்தனை வழிபாட்டிற்குரியன என்று மந்த மதியினர் கூறலாம். சிந்தனையில் தெளிவுள்ள நீங்கள், சிறுதொண்டனைப் பிள்ளைக் கறி கேட்ட சிவனை, சீலத்தையும் மறந்து இல்லக் கிழத்தியை அனுப்பி வைக்

கும்படி இயற்பகையைக் கேட்ட இறைவனை, கடவுள் இலக்கணத்தை விளக்கக்கூடிய கர்த்தா என்று கருதமுடியுமா? இத்தகைய இழிவான கதைகளை இந்த உலகத்திலே இந்நாட்டிலன்றி இன்றளவும் நம்பிக்கொண்டிருப்பவர் வேறெங்கேனும் இருக்கின்றனரா? இறைவன் இங்குக் கண்ணைக் கேட்டான், பெண்ணைப்பெற்றான், மண்ணை விரும்பினான் என்று கதைகள் இருப்பதுபோல் வேறு எங்கேனும் எந்த மதத்திலேனும் உண்டா? ஏன் இல்லை? இவைகளால் நாம் அடைந்த பயன் என்ன? இத்தகைய கதைகளை நம்பிக் கிடக்கும் நம் நாடு உள்ள நிலையை, ஆண்டவனை அறிவோடு பூஜித்துக் கடவுளைக் காமுகனாகவும் கயவனாகவும் கடை மனிதனின் கெட்ட குணங்களைத் திருக்கலியாண குணங்களாகக் கொண்டவனாகவும் சித்தரிக்காமல் ஞானத்திற்கும் சீலத்திற்கும் இருப்பிடமாகச் சித்தரித்துக் கொண்டுள்ள நாடுகளும் மதங்களும் உள்ள நிலையோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

போட்டி மதங்களோடு புதுப் பூசாரிகள் ஆகவன்று

மத விஷயமாகவுங்கூட நாங்கள் கூறுவது என்ன? மக்களுக்குள் ஜாதியைக் கற்பித்துப் பேதத்தை உண்டாக்கும் ஏற்பாட்டை மதமென்றும் மாண்புடையது என்றும் கூறி அதனைக் கண்டித்தலே மகா பாவம் என்று மிரட்டினால் எதற்கும் காரணம் கேட்கும்—எதையும் ஆராய்ந்து பார்க்கும் இந்தக் காலத்திலே யார் மருளுவார்கள்? அதிலும் உருவமற்ற ஆண்டவனை உள்ளன்போடு வணங்கி ஒருவரை ஒருவர் தாழ்த்தாமல் ஒன்றே குலம் என்ற தத்துவத்தோடு வாழுகின்ற இஸ்லாமியர்களைக் கண்ட பிறகு ஆண்டவன் சன்னதியைக் கள்ளர் குகை ஆக்காதீர்கள் என்று பூசாரிகளைக் கடிந்துரைத்த ஏசுநாதரின் வரலாற்றைப் படித்த பிறகு, புனிதமான எண்ணமும் நிராசையும் தேவையே தவிர, நீரில் மூழ்குவதும்



நீண்ட தூரம் செல்வதும் ஆரியப் புரோகிதரின் ஆணைக்கு அடங்குவதும் ஆண்டவனை அடைய மார்க்கங்களல்ல என்ற அறவுரையை, சுக போகத்தைத் துறந்து ஆரண்யத்தில் அலைந்து அறிவின் எல்லையைக் கண்டு அவனிக்கு எடுத்துரைத்த புத்த பிரானின் வரலாற்றைப் படித்த பிறகு, எப்படி நம்முடைய பழையகால ஏற்பாடாகிய பார்ப்பனீயப் பலிபீடமாகிய இந்துமதத்தை ஏற்றுக் கொள்ளமுடியும்? இதைத்தான் நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். அதிலும் நம்முடைய சமுதாயம் இன்றுள்ள இழி நிலையைக் கண்டதால், இந்நிலையை மாற்ற மறுமலர்ச்சியே மருந்து என்று தெரிந்து இந்தப்பணியில் இறங்கினோமே தவிர, போட்டி மதம் ஸ்தாபித்துப் புதுப் பூசாரிகள் ஆகவேண்டும் என்பதற்காக அல்ல.

பழையகால ஏற்பாடுகளால் நாமடைந்த பாழ்நிலை

பழைய கால ஏற்பாடுகளைப் பற்றிக்கொண்டிருப்பதால் நாம் எந்த அளவுக்குப் பாழான நிலையில் இருக்கிறோம்; பயனற்ற செயல்கள் புரிகிறோம்; வெளிநாட்டாரால் பரிகசிக்கப்படுகிறோம் என்பதை எண்ணிப்பார்ப்பவர்கள் எமது பணியில் பங்கு கொள்வரே தவிர, நமக்கு எதிரிடையாகப் படைதிரட்ட மாட்டார். ஆனால், பரிதாபத்திற்குரிய பாமரருக்கு விரோதி யார்? நண்பன் யார்? என்று விளங்குவதில்லை. அவர்கள் மட்டுமா? படித்தவர்கள் மட்டு மென்ன! கல்லூரி மாணவர் மட்டுமென்ன! மாணவர்கள் படிக்கவில்லையா தங்கள் கல்லூரிகளில் கிரேக்க சாம்ராஜ்ய அழிவுக்குக் காரணம் ஹெலாட் என்ற வகுப்பினருக்கு உயர் வகுப்பினர் இழைத்துவந்த கொடுமைதான் என்பதை! ரோம் சாம்ராஜ்ய அழிவுக்குக் காரணம் பிளபியன் (தாழ்ந்த வகுப்பினர்) பெட்ரிஷியன் (உயர்ந்த வகுப்பினர்) என்ற பேதம் என்பதை! அவர்கள் படிக்கவில்லையா? சுதந்திரம்,

சமத்துவம், சகோதரத்துவம் என்ற மும்மணிகள் நாகரிகத்தின் சின்னங்கள் என்பதை!

## பரிதாபகரமான படித்த கூட்டம்

இப்பொழுது மட்டுமென்ன! ஆப்ரிக்காவிலே நம்மவருக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்றவுடன் ஆர்ப்பரிக்கவில்லையா கல்லூரி மாணவர்கள்! ஆங்கிலேயரை எதிர்த்து அறப்போர் புரியவில்லையா? ஆகஸ்ட் கலவரத்தில் சேரவில்லையா? ஆசிரியர்மார்களுக்கு அடங்கி இருக்க முடியாதென்று எச்சரிக்கை விடவில்லையா? எல்லாம் செய்தனர். எதுவும் செய்வர். ஆனால் இங்குள்ள சமூகக் கொடுமைகளைக் கண்டால் ஏதும் கேளார், எதிர்த்திட எவரும் முன்வாரார், ஏன்? ஆங்கிலரை எதிர்க்கும் ஆற்றலுள்ள அதே கல்லூரி மாணவனுக்குத் திருமணம் நடக்கும்; அய்யர் வருவார். அப்பக்கமிருந்து இப்பக்கம் எழுந்திரு என்பார். ஆகஸ்ட் வீரன்—அமெரியை எதிர்க்கும் தீரன்—சுதந்திரத்திற்காகப் போராடும் சூரன், அய்யருக்கு மட்டும் அடங்குவான்; அவர் கூறுவது அனைத்தையும் கேட்பான்; எதற்கும் ஏன் என்று காரணம் கேளான்; எதிர்த்திடத் துணிவுகொள்ளான். இந்தப் பரிதாபகரமான படித்த கூட்டம் பக்குவம் பெறுவதற்குத்தான் இத்தனை பாடு ஒருவர் சொற்படி மற்றவர் நடப்பது அவசியத்தைப் பொறுத்தது. காரணத்தோடு கூடியது என்றால், எவரும் குறை கூறார்; படுத்திருக்கும் நோயாளியிடம் டாக்டர் வருகிறார், நாக்கை நீட்டு என்கிறார். நீ சொல்வது நான் கேட்பதா என்று நோயாளி இருக்கமாட்டான். நீட்டுவான். தன் நோய் தீர்க்கும் ஆற்றல் டாக்டருக்கு உண்டு என்பதால் கட்டியிருக்கும் வீட்டின் குறட்டை இடித்து எடு என்று முனிசிபல் கமிஷனர் கூறுகிறார். என் வீட்டுக்கு நீ யார் என்று வீட்டுக்காரர் கேளார் நகரப் பொதுமக்களின் நலனுக்கான



அதிகாரி அவர் என்ற காரணத்தால். அதுபோல் அறிவு ஆற்றல் செல்வம் சிறப்பு முதலிய எதிலே பார்ப்பனர் உங்களைவிடச் சிறந்தவர்கள் என்று அவர்களுக்கு அடங்குகிறீர்கள்?

## ஆரியனுக்கு ஏழாம் அறிவும் உண்டு

பணத்திலே பெரியவராக ராஜா சர் இல்லையா? படிப்பிலே பெரியவர்களாக சர். சண்முகமும், சர். ராமசாமியும் நம்மிடம் இல்லையா? இருந்தும் ஏன் இந்த இனம் பார்ப்பனரிடம் பணிந்து கிடக்கிறது? ஐந்து அறிவு படைத்த மிருகங்கள் ஆறறிவு படைத்த மனிதனிடம் அடங்குவதிலே ஆச்சரியம் இல்லை. ஆனால் ஆறறிவு படைத்த தமிழன் அதைப்போலவே ஆறறிவு படைத்த ஆரியனிடம் அடங்கிக் கிடப்பது அதிசயமாக இருக்கிறதென்று அன்பர் ஒருவர் கூறினார். ஆனால் ஆரியனுக்கு ஏழாம் அறிவு ஒன்று இருக்கிறது. அதுதான் பிறரை ஏய்த்துப் பிழைக்கும் அறிவு இப்படி அடங்கிக் கிடக்கும் தமிழன் தரணி ஆண்டவன் என்றும், ஆற்றல் மிகுந்தவனென்றும் அந்த நாள் வரலாறு அறிவிக்கிறது. இமயத்திலே வெற்றிக் கொடி நாட்டிய தமிழன் என்று சொல்லப்பட்டவன் இன்று எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பதா? அன்று ரோமாபுரிவரை வாணிபம் நடாத்திய தமிழன் இன்று வாழவழியின்றித் திகைப்பதா என்பதுதான் இன்று நாங்கள் உங்களை சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்வது. ஆகவேதான் பார்ப்பனீயம் என்ற பழைய ஏற்பாடு பாராண்ட தமிழர்களைக் கோழைகளாக்கிற்று என்று கூறுகிறோம். மீண்டும் மாண்புடன் வாழ வேண்டுமென்றால் இந்தப் பார்ப்பனீயம் அழிக்கப்பட்டாக வேண்டும்.

## கல் உடைக்கும் பார்ப்பனனைக் கண்டதுண்டா?

இன்றுள்ள உறுமையைத்தான் கவனியுங்கள்! வள

யில்லாத நாடு வறுமையுடன் இருந்தால் ஆச்சரியம் இல்லை. அரபு நாட்டுப் பாலைவனத்தில்—எஸ்கிமோப் பனிக்காட்டில் வளமிராது. இங்கு நீர்வளமும் நிலவளமும் குடிவளமும் குறைவில்லை மக்கள் மனவளம் ஒன்று தவிர. வற்றாத ஜீவநதிகள். அவைகளால் வளர்க்கப்படும் வயல்கள், அவைகளில் விளையும் வகை வகையான மணிகள்! நஞ்சையும், புஞ்சையும்! மிகுதி. நாடெங்கும் சாலைகள் சோலைகள்! மண்ணுக்கடியில் பொன்! கடலுக்குள்ளே முத்து! காட்டிலே சந்தனம்! இயற்கை எழிலுடன் விளங்கும் இந்நாட்டில் இல்லாமை இருக்கக் காரணம் என்ன? அந்த இல்லாமையும் அதன் பயனான ஈனத்தொழில் புரியும் நிலைமையும் தமிழரை மட்டும் தாக்குவானேன்? கல் உடைக்கும் பார்ப்பனனை நீங்கள் கண்டதுண்டா?

வர்ணாசிரமம் : சூது நிறைந்த ஒரு சுரண்டல் இயந்திரம்

கவிகள் பாடும் கருங்குவளை மலர்போன்ற கண் படைத்த நம் இனக் காரிகையர் காட்டுப் பாதையில் கடும் வெயில் நேரத்தில் கல் உடைக்கக் காணலாம். அது மட்டுமல்ல, வளமுள்ள இந்த நாட்டிலே பிறந்து இங்கு வாழ வழியின்றிக் கடல் கடந்து மலாய் ரப்பர் தோட்டத்திற்கும், சிலோன் தேயிலைக் காட்டிற்கும் கூலிகளாகச் செல்லுபவர் அக்கரகார வாசிகள் அல்ல. அந்தப் பரிதாபத்திற்குரிய தமிழர் தாய் நாட்டில் தாயைவிட்டுவிட்டுத் தனியேசெல்வர். திரும்பிவரும்போது தாய் புதைக்கப்பட்ட இடத்தையே காண்பர். மனையாளை மனையில் விட்டுச் செல்வர்; திரும்பி வருகையில் அவளை எலும்புக் கூடாகக் கண்டு திகைப்பர். சொந்த நாட்டிலே சோற்றுக்கு வகையின்றி, தங்க ஓடு போட்ட திருமண்டபத்தில் திருநடனம் புரியும் தில்லையானும், வைரக்கற்கள் இழைத்த விமானத்தில் படுத்துறங்கும் அரங்கநாதனும், வைர நாமத்தைச் சூட்டிக்கொண்டிருக்



கும் வரதனும், வெள்ளி ரிஷபமேறும் சிவனும், தங்க மயில் முருகனும் தங்கியிருக்கும் தாய்நாட்டில் தாங்கள் வாழ்வதற்கு வழியின்றி, வெளிநாடு செல்லும் அந்தப் பரிதாபத்திற்குரிய தமிழர் கப்பல் தட்டில் நிற்கையில் இந்த நாட்டை வாழ்த்தியிருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? கண்ணீரைக் கடல்நீரில்கலக்கிய அந்தக் கதியற்றவர்கள் அஷ்ட ஐஸ்வரியங்கள் உன்னிடத்தில் இருந்து என்ன? நாங்கள் அனாதைகள் தானே! வற்றாத நதிகள் இங்கே பாய்ந்து என்ன? எங்கள் வாழ்க்கை பாலைவனம்தானே! நஞ்சையும் புஞ்சையும இருந்தென்ன? நாங்கள் பஞ்சைகள் தானே? நாங்கள் வாழ வழி செய்யாமல் வெளி நாட்டிற்கு எங்களைப் போகச் செய்யும் தமிழ்நாடே! அரசியலை ஆங்கிலேயனிடமும், ஆத்மார்த்தத்தை ஆரியனிடமும், வாணிபத்தை வடநாட்டானிடமும் ஒப்படைத்துவிட்டுக் கிடக்கும் அடிமை நாடே! எங்களுக்குச் சோறில்லை சொர்ணம் விளையும் இந்த நாட்டில்! எங்களை இக்கதியில் விடும் நீ இருந்தென்ன? போயென்ன? அக்ரமத்திற்கு இடமளித்து அனாதைகளைத் துரத்தும் நீ அழிந்துபடு! அழிந்துபடு!! என்று சபிக்காமலிருந்திருப்பரா? வெளிநாட்டிற்குக் கூலியாகச் செல்லும் இழிநிலை, பாடுபட்டும் பசியாற உணவின்றித் திகைக்கும் தேய்நிலை நீங்கவேண்டாமா? வர்ணாசிரம தர்மம் என்ற வகையற்றவர் பேசும் ஏற்பாடு வேறொன்றுமில்லை, சூது நிறைந்த ஓர் சுரண்டல் இயந்திரம்தான். அதை முறியடித்தால் பாடுபடுபவன் பதைக்க வேண்டியதில்லை; உழைப்பு வீணாகாது; உலுத்தர் உயர மாட்டார். சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற தத்துவத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியும்.

திராவிட நாடு தனிநாடு ஆகவேண்டுமென்றும், மத சமுதாயக் கலைத்துறைகளில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டு

மென்றும் நாங்கள் கூறுவதன் நோக்கம், எல்லாரும் இன்புற்று இருக்கவேண்டும் என்பதுதான். எனவே இந்த மறுமலர்ச்சி—இன்ப வாழ்வின் மணம் கமழும் மறுமலர்ச்சி—தேவை என்று உணரும் தோழர்கள் இதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

முற்றும்

175894

Murthy Printing Works, Madras. C. 500. 20 9 43

**விரைவில் வெளிவரும்!**

சிந்தனைக்கு விருந்தளிக்கும்
சிறந்த வெளியீடுகள்

சங்கங்களுக்கும் வர்த்தகர்களுக்கும்
100-க்கு 25 கமிஷன் தரப்படும்.
தபால் செலவு தனி.

மறுமலர்ச்சி நூல் நிலையம்
15, கொண்டலையர் தெரு
ஜார்ஜ் டவுன் — சென்னை.